# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



(259)

Applicant

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. ர. ராணி, பி.இ.,

திட்ட அனுமதி

நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49–ன்கீழ்

ந.க.எண். 2989/2020/சேமா

நாள்.23.02.2021

ம.வ./சே.மா.(உ திரு)எண். 09/2021

உள்ளாட்சியின் பெயர். ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் – சேலம் மாவட்டம் – ஓமலூர் வட்டம் – ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் – வெள்ளாளப்பட்டி ஊராட்சி/கிராமம் – ச.எண் 53/1ஏ1ஏ1ஏ1பி–ல் 2.0 ஏக்கர்(87120 ச.அடி)பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் திரு. கே.எஸ்.ரகுநந்தகுமார் மற்றும் 3 நபர்கள், சேலம் அவர்களின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள் 28.10.2020, 04.02.2021 மற்றும் 15.02.2021..
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 07.11.2020, 10.11.2020 மற்றும் 10.02.2021.
3. சார்பதிவாளர், ஓமலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18–80/2020 நாள் 13.11.2020.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்14619/88/பிசிசி, நாள் 27.04.1988.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/90/எல்ஏ1, நாள்07.11.1992.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்7978/2012/எல்ஏ2 நாள் 19.04.2012
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள் 08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 2201/2017/SPI- Cell, நாள். 28.09.2017.
9. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019.

-------

**உத்திரவு :**

பார்வை 1–ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 10.11.2020 மூலம் சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை 1–ல் சுட்டிய கடிதம் நாள் 04.02.2021 மூலம் சாலை, பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகள் உள்ளாட்சிக்கும் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய பகுதியினை TANGEDCO-ற்கும் தானமாக, தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட விபரம் பெறப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

சேலம் உள்ளூர் திட்டக் குழும பகுதி, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண் 53/1ஏ1ஏ1ஏ1பி–ல் 2.0 ஏக்கர் அல்லது 87120 ச.அடி பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் ம.வ/சே.மா(உ.திரு) எண்.09/2021 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது. மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல்வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

   " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of if only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority ".

3. உத்தேசம் தொடர்பாக வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் உத்தேசத்திற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பொது நிபந்தனைகள்

1. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)–ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

2. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் திட்ட அனுமதி அளித்த பிறகு (1)திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, (2)சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

3. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

4. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.09.2002–ன்படி அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 16.06.2003–ல் உள்ளவாறு உள்ளாட்சியால் தானமாக தானபத்திரம் மூலம் மனுதாரர்களிடம் பெறப்பட்ட சாலைகளில் குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, தெருவிளக்குகள் போன்ற வசதிகளை மனுதாரர் செய்த பிறகே உள்ளாட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்றும் அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

23/2/24

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

23/2/24. 23/2/2024

**இணைப்பு**
முத்திரையிட்ட வரைபடம் – 2
நிபந்தனைப்படிவம் –2

**பெறுநர்**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்.

**நகல்**

1. திரு. கே. எஸ். ரகுநந்தகுமார்
மற்றும் 3 நபர்கள்,
எண்.6/4/பி6, 6வது வார்டு,
அம்மன் கோவில் தெரு,
கருப்பூர், சேலம் மாவட்டம்.

2. இருப்புக் கோப்பு

3. Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No.1A, 1st Floor, Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai 600 008.

ஓமலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை
திரு.ஆ.முருகேசன்.,

ந.க.எண். 2472/2020/தி5 நாள். 26.02.2021

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – ஓமலூர் வட்டம் – ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் – வெள்ளாளப்பட்டி ஊராட்சி/கிராமம் – ச.எண். 53/1ஏ1ஏ1ஏ1பி–ல் 2.0 ஏக்கர் (87120 ச.அடி) பரப்பளவு கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஸ்ரீ பாலாஜி நகர் ம.வ/சே.மா.(உதிகு) எண்.09/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது – மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை :
1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் கடித உத்தரவு ந.க.எண் 2989/2020/சே.மா நாள்.23.02.2021.
2. சார்பதிவாளர், ஓமலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18–80/2020 நாள்.13.11.2020.
3. திரு. கே.எஸ்.ரகுநந்தகுமார் மற்றும் 3 நபர்கள், சேலம் அவர்களின் விண்ணப்ப கடித நாள்.26.02.2021.

பார்வை 1ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் மாவட்டம் அவர்களின் உத்தரவில் ஓமலூர் வட்டம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் வெள்ளாளப்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண். 53/1ஏ1ஏ1ஏ1பி–ல் 2.0 ஏக்கர் (87120 ச.அடி) பரப்பளவு கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஸ்ரீ பாலாஜி நகர் ம.வ/சே.மா.(உதிகு) எண்.09/2021 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து மனுதாரரால் உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் பூங்கா பரப்பினை பார்வை 2ல் காணும் விவரப்படி உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் வெள்ளாளப்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண். 53/1ஏ1ஏ1ஏ1பி–ல் 2.0 ஏக்கர் (87120 ச.அடி) பரப்பளவு கொண்ட ஸ்ரீ பாலாஜி நகர் மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 35 எண்ணிக்கையிலான மனைகளுக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைபிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | மனை எண் | மனையின் பரப்பளவு (சதுர அடி) | வ.எண் | மனை எண் | மனையின் பரப்பளவு (சதுர அடி) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2073.75 | 3 | 3 | 2800 |
| 2 | 2 | 2100 | 4 | 4 | 2220 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 5 | 1665 | 21 | 21 | 2270 |
| 6 | 6 | 1678.75 | 22 | 22 | 1290 |
| 7 | 7 | 1150 | 23 | 23 | 1293.75 |
| 8 | 8 | 1500 | 24 | 24 | 1297.5 |
| 9 | 9 | 2000 | 25 | 25 | 1301.25 |
| 10 | 10 | 1800 | 26 | 26 | 1305 |
| 11 | 11 | 1350 | 27 | 27 | 1308.25 |
| 12 | 12 | 1113.75 | 28 | 28 | 1312.50 |
| 13 | 13 | 1522.5 | 29 | 29 | 1056 |
| 14 | 14 | 2100 | 30 | 30 | 1323.75 |
| 15 | 15 | 2800 | 31 | 31 | 1327.50 |
| 16 | 16 | 2400 | 32 | 32 | 1331.25 |
| 17 | 17 | 1800 | 33 | 33 | 1335 |
| 18 | 18 | 1350 | 34 | 34 | 1338.75 |
| 19 | 19 | 1402.50 | 35 | 35 | 3141.25 |
| 20 | 20 | 1743.75 | | | |

## நிபந்தனைகள்

1. இவ்வுத்தரவு பார்வை 1ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் மாவட்டம் அவர்களின் உத்தரவில் குறிப்பிட்டுள்ள 1 மற்றும் 2ல் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் 1 முதல் 6 வரையிலான பொது நிபந்தனைகளுக்குட்பட்டு மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.
2. இம்மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி மற்றும் தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கு ஏற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.
3. மனைப்பிரிவு அங்கீகாரத்தில் குறிப்பிட்டுள்ள மனையின் அளவுகள் மற்றும் சாலைகளின் அளவுகளை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதியின்றி மாற்றுதல் கூடாது.
4. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை பொது சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் ஊராட்சியால் கோரப்படும் தேர்வில் அதனை செலுத்த வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.
6. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
7. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட நிலத்தினை (மனைகளை ) வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து ஒப்படைக்கப்பட வேண்டும்.

U.S. [illegible]
M. [illegible]
M. Ravi
[illegible]

8. மனையின் உரிமையாளர் பார்வை 3ல் காணும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுவதாகவும், இவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கு உட்படுவதாகவும் தெரிவித்து, நிர்வாக அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

9. அரசாணை நிலை எண். 134/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.09.2002 ன் படி, அரசாணை எண் 71/ஊரக வளர்ச்சித்துறை, நாள். 16.06.2002 ன் படியும் மனுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைகளில் குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள் போன்ற வசதிகள் மனுதாரரால் செய்து முடிக்கப்பட்ட பின்னரே இறுதி உத்தரவு வழங்கப்படும்.

10. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைபிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால், பாதிப்பு ஏற்படக்கூடிய மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எவ்வித முன்னறிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

11. இந்த அனுமதி வழங்கப்பட்ட மனையிடத்தின் விபரத்தினை எந்நேரமும் பார்க்கத் தக்க வகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

12. இவ்வுத்தரவினை இரத்து செய்யவோ மாற்றி அமைக்கவோ, தேவையிருப்பின் நிபந்தனைகளில் மாற்றம் செய்யவோ ஓமலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ)க்கு முழு அதிகாரம் உண்டு.

26/4/2021

வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ),
ஓமலூர்

பெறுதல்

திரு.கே.எஸ். ரகுநந்தகுமார்
மற்றும் 3 நபர்கள்,
எண்.6/4/பி6, 6வது வார்டு,
அம்மன்கோவில் தெரு,
கருப்பூர், சேலம் மாவட்டம்.

நகல்

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

U.S. [illegible]
M. [illegible]
M. Rani



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate